## திராவிட இயக்க இதழ்கள் –
## ‘நாத்திகம்’ மீது நடவடிக்கை!

1950 களில், பல வார இதழ்கள் தி.மு.க வார ஏடு என முதல் பக்கத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்தன. கழகம் அப்போதுதான் வளர்ந்து வரும் கட்சியாக இருந்ததால், கொள்கை விளக்கமும், கலை இலக்கிய வளர்ச்சியும் அவசியமானதாக இருந்தது. தி.மு.க. தலைவர்கள், ஆதரிப்போர் பலரும் பத்திரிகைகள் நடத்தினர். இதனால், தி.மு.க. வார ஏடு எனப் போடப்பட்டு விற்பனையான இதழ்கள் மக்களிடம் வரவேற்பைப் பெற்றன.

அன்றைய சென்னை மாநகராட்சி, மயிலாப்பூரில் 44-வது வட்டச் செயலாளராக இருந்த ராமசாமி, ‘நாத்திகம்’ என்கிற பெயரில் பத்திரிகை தொடங்கியபோது, “பெயரை மாற்றலாம் அல்லது தி.மு.க. ஏடு என்று இருப்பதை எடுத்துவிட்டு, இதே கருத்தில் சுயமரியாதை கொள்கை ஏடாக நடத்தும்படி’ கூறியிருக்கிறார் அண்ணா. ஆனால், அதையும் மீறி, அதே பெயரில் இயங்கியதுடன் ‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’ என அண்ணா கூறியதை வைத்து, கிறிஸ்தவர்கள் கட்சியில் இணைவதாக விமர்சனக் கட்டுரைகள் எழுதியது அந்த இதழ். இதையடுத்து, கழகக் கட்டுப்பாட்டுக்கு ஊறு விளைவிப்பதாக உள்ளது என, தலைமை நிலையத்தின் வழி ‘நாத்திகம்’ கழகப் பத்திரிகை அல்ல’ என்று விளக்கம் வெளியிடப்பட்டது.

தி.மு.க.வில் நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு, நாத்திகம் ராமசாமி காங்கிரஸில் சேர்ந்தார். ஆனால், அங்கும் நாத்திகக் கொள்கையை விட்டுக் கொடுக்காதவராகவும் பிரச்சாரம் செய்பவராகவும் நீடித்தார்.

## :ப்ளாஷ்பேக்





எஸ்.வி.சுரேஷ்

### ‘என் மகனை வாழ்த்திய தலைவர்!’

9.10.2014 அன்று எனது மகன் சு.விஸ்வநாத் பிறந்த நாளுக்காக, முத்தமிழறிஞர் கலைஞரிடம் வாழ்த்துப் பெற, கோபாலபுரம் இல்லத்துக்குக் குடும்பத்தினருடன் சென்றோம். தலைவர் எங்களிடம் நலம் விசாரித்து, மகன்களின் கல்வி விவரங்களையெல்லாம் கேட்டறிந்து வாழ்த்தினார். அத்தகைய நெகிழ்ச்சியான தருணத்தில், அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம்.

**– எஸ்.வி.சுரேஷ்,**
**முன்னாள் மாமன்ற உறுப்பினர்,**
**நெல்லை மாநகராட்சி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்
### பெரியார் நடத்திய விடுதி!

மூன்றாவது தஞ்சை மாவட்ட சுயமரியாதை மாநாட்டில் 22 வயதான சின்னராயம்மாள் என்ற பெண்ணின் சார்பாக, ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. 50 வயதான ஒரு ஆணுக்கு மூன்றாம் தாரமாக வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்யப்பட்டு இருந்தார் சின்னராயம்மாள். ‘குழந்தை வேண்டும்’ என்று அவரது கணவர் கட்டாய உறவு கொள்ள முயன்றபோது, சின்னராயம்மாள் வீட்டை விட்டு வெளியேறி, பெரியார் நடத்திய விடுதியில் குடிபுகுந்தார்.

# மாநாடு

**ர.பிரகாசு** **45**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## மக்களுக்கான மகத்தான இயக்கம்!

மக்கள் பிரச்சினைகளை அவர்களின் பிரதிநிதிகளாக இருந்து, அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுசெல்லும் வழக்கத்தை முதன்முதலாக கையிலெடுத்த இயக்கம் தி.மு.கழகம். ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி எஸ்.நாராயண் எழுதிய ‘திரவிடியன் இயர்ஸ்’ நூலில், அதை வியந்து குறிப்பிட்டிருப்பார். ஒவ்வொரு ஊரின் பிரச்சினைகள், தேவைகள், கல்வி-வேலைவாய்ப்பு அம்சங்களைப் பெருக்குதல் என அடித்தட்டு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான பேரியக்கமாக தி.மு.கழகத்தைச் செதுக்கினார் பேரறிஞர் அண்ணா.

அதற்கான வரலாற்றுச் சான்றாக கழக மாவட்ட மாநாடுகள் திகழ்கின்றன. அதில் ஒன்றுதான், சேலம் மாவட்ட தி.மு.கழக மூன்றாவது மாநாடு.1958-ஆம் ஆண்டு பிப்ரவரி 15, 16 தேதிகளில் ஏற்காடு செல்லும் வழியில் உள்ள வேலூர் என்ற சிற்றூரில் நடைபெற்றது. இன்னிசை நிகழ்ச்சியுடன் முதல் நாள் மாநாடு தொடங்கியது.

பல்லாயிரக்கணக்கானோரின் பேரொலிக்கு இடையே மாநாட்டுத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் கழகக் கொடியை ஏற்றினார். அதன்பிறகு நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாநாட்டைத் திறந்து வைத்தார். ஜி.பி.சுந்தரம் வரவேற்புரையாற்றினார். தலைமையுரையாற்றிய கலைஞர் கழகத்தின் லட்சியங்கள், நாடு எதிர்நோக்கியிருந்த நெருக்கடிகள் குறித்து விரிவாகப் பேசினார்.

சி.பி.சிற்றரசு, மதுரை எஸ்.முத்து, இரா. செழியன், என்.வி.நடராசன், லட்சிய நடிகர் எஸ்.எஸ்.இராசேந்திரன், ஈ.வெ.கி.சம்பத் ஆகியோர் ஆணித்தரமான கருத்துக்களை எடுத்துரைத்தனர். ‘நாகூர்’ ஹனிபா குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு, முதல் நாள் மாநாடு இரவு ஒரு மணிக்கு நிறைவுற்றது.

மறுநாள் காலை 10 மணிக்கு, உளுந்தூர் பேட்டை நித்தியானந்தம் அவர்களின் இயக்கப் பாடல்களுடன் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் தொடங்கின. அ.பொன்னம்பலனார், கே.ஏ.மதியழகன், கே.எச்.எம்.சுபேர், ஆர்.எஸ்.பாண்டியன், பி.எம்.கருணாகரன், ஏ.கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, ஏ.வி.பி.ஆசைத்தம்பி ஆகியோர் அடுத்தடுத்து உரையாற்றினர். உணவு இடைவேளைக்குப் பிறகு 25 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தின்போது நிகழ்த்தப் பட்ட அடக்குமுறையால் உயிரிழந்த கழகத் தோழர்கள் மொய்தீன்பிச்சை, கோவிந்தராவ் ஆகியோருக்கு இரங்கல், இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் மட்டுமின்றி, சேலம் மாவட்டத்தின் கல்வி, தொழில், விவசாயம் சார்ந்தும் பல தீர்மானங்கள் அதில் இடம்பெற்றிருந்தன.

**சுமார் ஒன்றரை மணி நேரம் அண்ணா இறுதிப் பேருரையாற்றினார். அப்போது எழுந்த கரவொலியும், பேரொலியும் மக்களுக்கான மகத்தான இயக்கமாக தி.மு.கழகம் உருவாகிவிட்டது என்பதை உணர்த்தியது.**

சேலத்தில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டும், ஜவ்வரிசி மாதிரித் தொழிற்சாலை அமைக்க வேண்டும், அன்றைய சேலம் மாவட்டத்துக்குட்பட்ட கிருஷ்ணகிரி, நாமக்கல்லில் தலா ஒரு கல்லூரியும், சேலம் நகரில் பெண்கள் கல்லூரியும், தொழிற்கல்லூரியும் அமைக்க வேண்டும், இனாம் முறையை ஒழிக்க வேண்டும், மேட்டூருக்கு நகர சபை அந்தஸ்து அளிக்க வேண்டும், சேலத்திற்குப் புதிய ரயில் பாதைகள் அமைக்க வேண்டும், கைத்தறி நெசவாளர்களின் நெருக்கடியைத் தீர்க்க வேண்டும், நிலச் சீர்திருத்தம் செய்ய வேண்டும், கூட்டுறவுக் கடன் வழங்க வேண்டும் எனப் பல தீர்மானங்கள் சேலம் மாவட்ட வளர்ச்சியையும், மக்கள் பிரச்சினைகளையும் மையப்படுத்தியே இருந்தன.

மாலையில் நடைபெற்ற சொற்பொழிவில், ‘இந்தியாவில் ஜனநாயகம்’ என்ற தலைப்பில் நாஞ்சில்.கி.மனோகரனும், கல்வித்திட்டங்கள் பற்றி பேராசிரியர் க.அன்பழகனும், கழக வளர்ச்சி பற்றி நாவலர் நெடுஞ்செழியனும் உரையாற்றினர். அதன்பிறகு, சுமார் ஒன்றரை மணி நேரம் அண்ணா இறுதிப் பேருரை யாற்றினார். அப்போது எழுந்த கரவொலியும், பேரொலியும் மக்களுக்கான மகத்தான இயக்கமாக தி.மு.கழகம் உருவாகிவிட்டது என்பதை உணர்த்தியது.

**...கூட்டம் திரளும்**

# பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** **45**

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## மறக்கப்பட்ட வரலாற்றிலிருந்து...

அரசியல்-பொருளாதாரம்-சமூகம்-சுற்றுச்சூழல் என அனைத்துத் துறைகளிலும் காலனியத்தின் தாக்கங்களை உள்ளடக்கிய ஒரு சமூகத்தில் வாழ்ந்து வந்தாலும், நேரடியாக காலனிய ஒடுக்குமுறைகளால் பாதிக்கப்படாத தலைமுறையைச் சேர்ந்தவர்கள் நாம். காலனியம் பற்றி அறிந்துகொள்ள இலக்கியங்களும், வரலாற்று ஆவணங்களும், எழுத்துருவற்ற செவிவழிச் செய்திகளுமே நமக்கான சான்றுகளாக இருக்கின்றன.

அதிலும் பெரும்பாலான வரலாற்று ஆவணங்கள் காலனிய ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்டவை. அதில் வெளிப்படுவதெல்லாம் ஒடுக்குபவர்களின் பார்வையே அன்றி, சுதேச மக்களின் பார்வையல்ல. விதிவிலக்காக நமக்கென்று சில சுதேசிப் பத்திரிகைகளும், விடுதலை இயக்கத் தலைவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களுமே ஆவணங்களாக எஞ்சி இருக்கின்றன. அப்படித் திரட்டப்பட்ட ஆவணங்களைக் கொண்டு ஒரு பெரும் எழுச்சியின் வரலாற்றைப் பதிவு செய்திருக்கிறார், வரலாற்றாசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி.




‘திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908’ என்ற அந்த நூலுக்காக இந்தாண்டிற்கான ‘சாகித்ய அகாடமி விருது’ம் அவருக்குக் கிடைத்துள்ளது.

தேசிய விடுதலை இயக்க நடவடிக்கைகளில் ‘தூங்குமூஞ்சி மாகாணம்’, ‘இருண்ட மாகாணம்’ என்றெல்லாம் சொல்லப்பட்ட தமிழ்நாட்டில் 1908-களிலேயே காலனிய ஆட்சியாளர்களுக்கு எதிராக விடுதலை எழுச்சி நடந்துள்ளது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் கிளர்ச்சி என்று விளிக்கப்பட்ட திருநெல்வேலி எழுச்சியையும் அதற்கு காரணகர்த்தாவாக இருந்த வ.உ.சிதம்பரனார் அவர்களையும் மிக நெருக்கமாக இந்த நூல் பதிவு செய்கிறது.

திருநெல்வேலி எழுச்சி ஏற்பட வ.உ.சி மற்றும் சுப்பிரமணிய சிவாவின் கைது உடனடிக் காரணமாக அமைகிறது. ஆனால், அதற்கு முன்பே அங்கு நடந்த ‘கோரல் ஆலை வேலைநிறுத்த’மும், ‘சுதேசி கப்பல் கம்பெனி’க்கு எதிரான நடவடிக்கைகளும் அவற்றை ஒடுக்க நினைத்ததால், மக்களிடம் ஏற்பட்ட சுதேச உணர்வும் முதன்மைக் காரணங்களாகக் கூறப்படுகின்றன. சூரத் காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றுத் திரும்பிய வ .உ.சியின் எழுச்சி உரையும் ‘திருநெல்வேலி எழுச்சி’ ஏற்பட ஊக்கமாக இருந்துள்ளது.

திருநெல்வேலி எழுச்சி, கலகமாக மாறி பின்னர் ஒடுக்குமுறைக்கு இரையாக்கப்படுகிறது. எழுச்சி ஒடுக்கப்பட்ட பின்னர், திமிரை அடக்க ‘திமிர் வரி’யும் விதிக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து அங்கு வேறெந்த எழுச்சியும் ஏற்படாவண்ணம் காவல் துறையின் கண்காணிப்பும் வேகமெடுக்கின்றன. இந்த நூல் எழுச்சி ஏற்பட்ட வரலாற்றை மட்டுமல்லாது, அது ஒடுக்கி முடக்கப்பட்ட விதத்தையும், எழுச்சியின் காரணமாக ஏற்பட்ட பின்விளைவுகளையும் சேர்த்தே சுட்டிக்காட்டுகிறது.

இரட்டை ஆயுள் தண்டனைக்கு ஆளான வ.உ.சி, அதைத் தொடர்ந்து சந்தித்த பொருளாதார நெருக்கடிகள் குறித்தும், இந்த நூல் பதிவு செய்கிறது. காலனிய தமிழ்நாட்டில் நடந்த முதலும் கடைசி அரசியல் கொலையான ஆஷ் கொலைக்குக் காரணமாகவும் திருநெல்வேலி எழுச்சி இருந்ததையும் படிக்கும்போது வியக்காமல் இருக்க முடியவில்லை.


சுவாரசியம் மிகுந்த தகவல்களைக் கொண்ட விறுவிறு நடை, தரவுகளின் உறுதிப்பாடு ஆகியவை இந்த நூலின் வாசிப்பை எளிமையாக்குகின்றன. வ.உ.சியின் 150-வது பிறந்த நாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி முடித்திருக்கும் தருவாயில், இந்தப் புத்தகம் தமிழர்களாலும், இந்தியர்களாலும் மறக்கப்பட்ட ஒரு வரலாற்றை நம் கண் முன் காட்சிப்படுத்துகிறது.

**...வாசிப்போம்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**713**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131